

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

கலைஞர் 100 1924 - 2024

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 308 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 04 – செவ்வாய்க்கிழமை 18 ஜுன் 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 308 : Thiruvalluvar Year - 2055 - Aani 04 - Tuesday 18 June 2024 - Dak 8 Pages ₹ 5.00


## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் - 10.10 மில்லியன் டன் உற்பத்தி!

# தமிழ்நாட்டில் பால் உற்பத்தியில் சரித்திரச் சாதனை!

## நாட்டின் மொத்த உற்பத்தியில் 4.57 சதவிகிதம் என சிறந்து விளங்கும் 'ஆவின்' நிறுவனம்!

சென்னை, ஜூன் 18-

**திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திறன்மிகு ஆட்சியில் பால்வளத் துறையில் 10.10 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் 4.57 சதவீதம் என சரித்திர சாதனை படைத்தும், இந்தியாவிலேயே வாடிக்கையாளர்களுக்கு பால் அட்டைகள் மூலம் பால் விநியோகம் செய்தும் பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவையும், நம்பிக்கையையும் பெற்று சிறந்து விளங்குகிறது ஆவின் நிறுவனம்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

இந்தியாவில் 1970-80களில் நடைபெற்ற வெண்மைப் புரட்சிக்கு முன்பாகவே 1958 ஆம் ஆண்டே தமிழ்நாட்டில் பால் உற்பத்தியினை ஒருங்கிணைக்கும் நோக்கில், பால் வளத்துறை தொடங்கப்பட்டு 1965 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையிலிருந்து நிர்வாகம் மற்றும் சட்டரீதியான அதிகாரங்கள் பால்வளத் துறைக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பிலிருந்து 1972 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்துறையின் கீழ் (Companies Act) வணிக நடவடிக்கைகளை மேலாண்மை செய்யும் நோக்கில் தமிழ்நாடு பால் உற்பத்தி வளர்ச்சிக் கழகம் (TNDDC) உற்பத்திக் கழகம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களின் காரணமாக பால் உற்பத்தி வளர்ச்சிக் கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதியப்பட்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு மாற்றப்பட்டது.

உலகளவில் அதிக அளவிலான பால் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாக திகழும் வேளையில், நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில், தமிழ்நாடு 4.57 சதவீத பங்களிப்பை வழங்கி வருகிறது. தமிழ்நாடு பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாடுத்துறையின் கட்டுப்பாட்டில் தற்போது கிராம அளவில் மொத்தம் 10,814 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் செயல்பாட்டில் உளள 9,189 சங்கங்களில் 1,856 சங்கங்கள் மகளிர் சங்கங்களாகச் செயல்படுகின்றன.

### பால்வளத்துறையின் முதன்மையான நோக்கம்!

பால் வளத்துறையின் முதன்மையாக நோக்கமே கிராம அளவில் ஏழை எளியோரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட கால்நடை வளர்ப்பினை ஊக்குவித்தல், அதன் மூலம் பால் உற்பத்தியினைப் பெருக்குதல், தன்னிறைவைப் பெறும் உயரிய நோக்கில் பல்வேறு திட்டங்கள் திறம்படச் செயல்படுத்துதல் ஆகும். குறிப்பாக, தமிழ்நாட்டில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக மக்களின் மனதில் பதிந்திருக்கும் ஆவின் நிறுவனத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்குத் தரமான பால் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பால் அட்டைகள் மூலம் குறைந்த விலையில் பால் விநியோகமானது சீரான முறையிலும் நேர்த்தியான முறையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பால்வளத் துறை சார்பில் ஈரோட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, திருநெல்வேலி மாவட்ட ஒன்றியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி நிதியுதவியின் மூலம் மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலகம், ஆய்வகம், விடுதி வசதியுடன் கூடிய பயிற்சி நிலையக் கட்டடங்கள் மற்றும் பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் முக்கிய பங்கு வகிப்பது பால் பயன்பாடு ஆகும். இதனை கருத்தில் கொண்ட முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற முதல் நாளில் கையொப்பமிட்ட 7 அறிவிப்புகளில் ஆவின் பால் விற்பனை விலையை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் குறைத்து உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த 3 ஆண்டுகளில் பால் வளத்துறையினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, பால் கொள்முதல் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல், நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆவின் பாலை குளிரூட்டும் வகையில் சேமிப்புக் கிடங்குகளை அமைத்தல், நுகர்வோரின் தேவையறிந்து அதற்கேற்ப ஆவின் மூலம் விற்பனை செய்யப்படும் ஆவின் நெய், ஐஸ்கீரிம், யோகார்ட், பாயாசம் மிக்ஸ், பால் புரத நூடுல்ஸ், டெய்ரி ஒய்ட்னர், 40 நாட்கள் வரையில் கெட்டுப் போகாமல் இருக்கும் பதப்படுத்தப்பட்ட பால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உலகத்தரம் வாய்ந்த ஆவின் பால் பவுடர் உற்பத்தியை அதிகரித்தல், பால் உற்பத்தியாளர்களின் கொள்முதல் விலையை அவ்வப்போது உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### பால் கொள்முதல் - விநியோகம்!

தமிழ்நாடு முழுவதும் இயங்கி வரும் 9,189 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நாள் ஒன்றுக்கு சுமார் 3.85 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பால் வழங்கி வருகின்றனர். இதன் மூலம் தற்போது நாளொன்றுக்கு 35.67 இலட்சம் லிட்டர் பால் சங்க அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, அதில் 4 இலட்சம் லிட்டர் பால் உள்ளூர் தேவைக்காக சங்கங்கள் மூலம் விற்பனை செய்தது போக, 31.67 இலட்சம் லிட்டர் பால் 27 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பால்வளத் துறை சார்பில் மதுரை பால் பண்ணை வளாகத்தில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட ஆவின் நிறுவனத்தின் புதிய ஐஸ்கிரீம் தொழிற்சாலையை திறந்து வைத்தல்.

கடந்த 22.7.2021 அன்று ஆவின் நிறுவனம் 43.05 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது.

மேலும், பால் கொள்முதலை அதிகரிக்கும் பொருட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் பசும்பாலின் கொள்முதல் விலை லிட்டருக்கு 32 ரூபாயிலிருந்து 35 ஆகவும், எருமைப் பாலின் விலை லிட்டருக்கு 41 ரூபாயிலிருந்து 44 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடந்த 18.12.2023 முதல் கொள்முதல் செய்யப்படும் பசும்பால் மற்றும் எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. 18.12.2023 முதல் ஏப்ரல் 2024 வரையான காலத்திற்கு 108.30 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாகப் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் அனைத்து உறுப்பினர்களும் பயனடைந்து வருகின்றனர்,

### அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்!

இந்திய அளவில் பால் உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வரும் தமிழ்நாடு அரசின் பால் வளத்துறையின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

- ரூபாய் 21.75 கோடிச் செலவில் 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட 4 எண்ணிக்கையிலான மொத்த பால் குளிர்விப்பு நிலையங்களும் மற்றும் 5000 லிட்டர் கொள்ளவு கொண்ட 143 எண்ணிக்கையிலான மொத்த பால் குளிர்விப்பு நிலையங்களும் நிறுப்பட்டுள்ளன.
- ரூபாய் 18.76 கோடி செலவில் 866 தானியங்கி பால் சேகரிப்பு அலகுகளும், 350 எண்ணிக்கையிலான செயலாக்க தரவு பால் சேகரிப்பு அலகுகளும், 1074 எண்ணிக்கையிலான பால் பகுப்பாய்வு கருவிகளும் நிறுவப்பட்டுள்ளன.
- ஈரோடு ஒன்றியத்தில் உள்ள கால்நடை தீவன தயாரிப்புத் திறன் நாள் ஒன்றுக்கு 150 மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து நாள் ஒன்றுக்கு 300 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.
- கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் புதிதாக நாள் ஒன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தாது உப்பு கலவை தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.
- ரூ.2 கோடி செலவில் மாதவரம் பயிற்சி நிலையம் மற்றும் வேலூர், விழுப்புரம் மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

மேற்கு வங்க ரயில் விபத்துக்கு

# மோடி அரசின் தவறான நிர்வாகமே காரணம்!

## மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூன் 18 -*

*மோடி தலைமையிலான பாஜக அரசின் தவறான நிர்வாகமே ரயில் விபத்துக்கு காரணம் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.*



*இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே அமைச்சகத்தை மோடி அரசு சீரழித்து விட்டது என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.*

*மேற்குவங்கத்தில் கஞ்சன்ஜங்கா விரைவு ரயில் விபத்துக்குள்ளான சம்பவம் வேதனையை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ள மல்லிகார்ஜுன கார்கே, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.*

*மோடி அரசு, கடந்த 10 ஆண்டுகாலத்தில் ரயில்வே அமைச்சகத்தை சுய விளம்பரத்திற்காக பயன்படுத்திக் கொண்டதால் நிர்வாகச் சீர்குலைவு ஏற்பட்டுள்ளதாகவும் இந்த உண்மைக்கு தற்போதைய ரயில் விபத்து மேலும் ஒரு சான்றாக அமைந்துள்ளது என்றும் கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.*

*இந்திய ரயில்வே துறையை கைவிட்ட கிரிமினல் குற்றத்திற்கு மோடி அரசு பொறுப்பேற்க வேண்டும் என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தி உள்ளார்.*

# மேற்கு வங்கத்தில் பயணிகள் ரயில் மீது சரக்கு ரயில் மோதி விபத்து!

## பலி 15 ஆக உயர்வு! - 60க்கும் மேற்பட்டோர் காயம்!

கொல்கத்தா, ஜூன் 18–

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் பயணிகள் விரைவு ரயில் மீது சரக்கு ரயில் மோதிய விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 60க்கும் அதிகமான பயணிகள் காயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து அதிர்ச்சி அளிப்பதாகவும், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட உயரதிகாரிகள் சம்பவ இடத்தில் பணிகளை மேற்கொண்டிருப்பதாகவும் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைகளில் சேர்க்கும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், வடகிழக்கு ரயில்வே மண்டலத்தில் நடந்துள்ள இந்த விபத்து துயரத்திற்குரியது என்றும் மீட்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.




மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் நிகழ்ந்துள்ள ரயில் விபத்தில் உயிர்கள் பலியாகி இருப்பது மிகுந்த வேதனையை அளிப்பதாக குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்காக தாம் பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார். காயமுற்றவர்கள் விரைந்து குணமடையவும் மீட்பு பணிகள் வெற்றிகரமாக அமையவும் பிரார்த்திக்கிறேன் என்றும் குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.